ஆகவே, இந்த அரசு நியாயமான கோரிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றும். அது எப்போது நிறைவேற்றும் என்பது அரசு இருக்கிற சூழ்நிலைகளையொட்டி அந்த முடிவுகளை எடுக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழக அரசின் 1977-78 மற்றும் 1978-79-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் மீது இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் வேளாண்மைத் துறை குறித்த பத்திகள் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருபத்திரெண்டாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) களில் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தேழாவது அறிக்கை.

1971-72 மற்றும் 1972-73-ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மானியங்களிலும், சாட்டப்பெற்ற நிதியொதுக்கங்களிலும் மிகைச் செலவு குறித்த பொதுக் கணக்குக் குழு அளித்த ஒன்பதாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருபத்திநான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை)-யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளில் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கை பற்றிய இருபத்தெட்டாவது அறிக்கை.

1979-80-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதியொதுக்கீடுகளிலும் மிகைச் செலவு பற்றி பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்திரண்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் அறுபத்தி நான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை)-யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய இருபத்தொன்பதாவது அறிக்கை.